
உ

சிவமயம்

# தென்கதிரை முருகன் பேரில்

# சிறை மீட்ட கும்மி



பாடியோன் :

**ந. மா. கேதாரப்பிள்ளை**

முதலைக்குடா, கொக்கட்டிச்சேலை.

உ

தென் கதிரை முருகன் பேரில்

# சிறை மீட்ட கும்மி

### விநாயகர் துதி

1 ஐந்து கரத்தனை வாரும விநாயகா
ஆனைமுகவா உன்னைப் பணிந்தேன்
சிந்தை குளிர்ந்துகந் தர்க்கும் கும்மிபாட
சிறியேன் எனக்கு அருள் தருவாய்.

2 சீராரும் செந்தில் வடிவேலவர் மேல் நான்
சிறைமீட்ட செந்தமிழ்க் கும்மிபாட
காராளை முருகனே கற்பகமே வந்து
கணபதியே காத்து அருள்புரிவாய்.

### விஷ்ணு வணக்கம்

3 மாயவா என்முன்னே வாரும் சுவாமி நீ
மானிடனாகிய நானுமிங்கே
வாயால் மனம் நொந்து பாடுகிறேன் கும்மி
வாலையாய் என்னுடன் நில்லுமப்பா

### சுப்பிரமணியர் துதி

4 கலியுக வரதா நீர் கேளு மையா உன்மேல்
கருணையுடன் கும்மி பாடுதற்கு
பலிதமாய் முத்தமிழ் மொழியினை என்னாவில்
பாங்குடன் நிறுத்தி நெஞ்சில் இரும்

5 கந்தா முருகா குகா கதிர்வேலா
கார்த்திகேயா கும்மி பாடுதற்கு
இந்தாவென அருள் நாவினில் வா லையை
ஈசன் மகனேயுன் பாதம் தஞ்சம்

Divisional Secretary
Manmunai South West
Paddiruppu

6 தத்திமித் தாமென ஆடும் சரஸ்வதி
பத்தினியே கும்மி பாடுதற்கு
முத்தமிழ் கல்வி முழுவதையு மெந்தன்
சித்தித் தனிலே சேவியுமம்மா.

7 அம்மா சரஸ்வதியே வாரும் என்முன்
அப்பன் கந்தர்க்குநான் கும்மிபாட
சும்மாயிராமல் மழைபோல் பொலிந்திடும்
தோகையே எந்தன் நாவினில் நின்று

## கும்மி மெட்டு

தந்தன தான தன தானா தன
தான தந்தன தானானா
தந்தன தான தன தானா தன
தான தந்தன தானானா

8 பச்சை மயில் ஏறும் கந்த சுவாமியரே!
பழனிமலை வாழும் கடவுளரே!
இச்சையுடன் உன்னை வணங்குகிறேன் வந்து
என்சிறை மீட்டுயிர் காருமப்பா.

9 பாருலகில் என்னைப்படைத்துத் கொலை
பாவங்கள் செய்யவே ஞானந் தந்தீர்
ஆர்துணை நீரன்றி தூக்கு மேடையினில்
ஆண்டவனே சிறை மீளுமப்பா.

10 பிள்ளை நான் செய்திடும் பாவவினைகளை
பிதாவாகிய நிர் பொறுக்க வேண்டும்
வள்ளி தெய்வானையுடன் மயில் ஏறியே
வந்துயிர் கார்சிறை மீளுமப்பா.

11 பீடித்த வல்வினை நோய் எனக்கு
பேதகமாய் நின்று வாட்டுதையா
ஓடிவந்து கார் மயிலேறி என்னுயிர்
உத்தமனே சிறை மீளுமப்பா

12 புஸ்பதாடகம் தனிலுதித்த வேலா
புண்ணியனே நான் என்ன சொல்லுவேன்
தப்பாமல் தலைமயிர்கள் பழுத்து
தானே கண்பார்வையும் குன்றுதப்பா.

13 பூ ட்டிய மின்சார வெளிச்சமிங்கே
பூ வாசா! பைப்புத் தண்ணீர்க் குளிப்பும்
காட்டியடைக்கிறார் கதவேழுக்குள் தினம்
கதிரேசா! என்சிறை மீளுமப்பா.

14 பெரும் புகழாகவே கூறுகிறேன் சிறை
பெருத்த கோபுரங்கள் தான் அதிகம்
பாரும் புகழும் இரும்புக் கேற்றேழுண்டு
பச்சை மயிலேறி வாருமப்பா.

15 பேருமோ சொல்லுகின்றேன் போகம் பறை
பெரிய சிறைச்சாலை இமய கூடம்
காருமெனதுயிர் கந்தா இவ்வேளையில்
கார்த்திகேயா சிறை மீளுமப்பா

16 பையவே மயில் ஏறி வாரும் கந்தாகுகா
பாலன் நான் பாடும் துயரம் பாரும்
மெய்யெல்லாம் புண்ணாகி விட்டதே என்செய்வேன்
விடியுமட்டும் மூட்டைக் கடியுமப்பா.

17 பொழுது உதயமோ தெரியாது இந்த
பூ லோக வெளிச்சமோ புரியாது
அழுது புலம்பியும் சீவன் போகுதில்லை
அன்பனே என் சிறை மீளுமப்பா.

18 போற்றியே உன்னை இரவுபகலாகப்
புண்ணியனே நானும்பாடுகிறேன்
தேற்றவே வள்ளி தெய்வானையுடன் வந்து
செந்தில் வேலா சிறை மீளுமப்பா.

19 பௌத்திரமாக எனைவைத்துப் மூட்டியே
பலவாறு துன்பம் புரிகிறார்கள்
கயிற்றுக்கு இரையாகப் போகு முன்னே வந்து
கந்தா! என் சிறைமீளுமப்பா.

20 வருசமோ வந்து இரண்டாச்சு
வடிவேலா உன் மனம் கல்லோ இரும்போ
தரிசனம் தந்தென்னை இன்னும் வதையாமல்
சண்முகனே சிறை மீளுமப்பா.

21 வாழ்வே எனக்கினி இல்லா விட்டால்
வடிவேலா என் சீவன் எடுத்துவிடு
தாழ்வோ ஆனாலும் உலகில் வாழ்வதற்கு
தற்பரனே சிறை மீளுமப்பா.

22 விட்டதும் வினைகள் நீதானே
வேருடன் அறுப்பதும் நீதானே
பட்டது போதும் நான் பாடுகிறேன் உன்மேல்
பாவியென் சிறையை மீளுமப்பா

23 வீராதி வீர சூரர்களை வென்றன்று
விண்ணுலகமுய்ய வீற்றிருந்து
தேவாதி தேவர்களை வாழ வைக்க நீ
தேவா என் சிறையை மீளுமப்பா.

24 உறக்கமும் கண்ணுக்கு வருகுதில்லை
ஒருபக்கமும் காற்று வீசுவதில்லை
மறக்கவே மூளையும் எனைவிட்டு மாறாது
மயிலேறியே சிறை மீளுமப்பா

25 ஊதிடும் சங்கும் கையிலெடுத்து
உக்கிர வேலையும் தானெடுத்து
ஆதியுலக வலம் வந்தவா சிறை
அம்மையுடன் வந்து மீளுமப்பா.

26 வெட்கம் மிகுந்துமே வேண்டாமென்று வடி
வேலா மலை யேறிநின்ற நீர்
மக்கள் வினை தீர்த்து ஆளுகின்ற குகா
மால் மருகா சிறை மீளுமப்பா.

27 வேண்டாதோ இனி உமக்கு உலகில் நான்
வேறு ரூபமும் ஆக்கிவிட்டாய் எனை
ஆண்டவா! சக்தி சித்தி முத்தி தந்து
அமரர்தேவே சிறை மீளுமப்பா.

28 ஒழுகுதேகண்ணீர் கண்களிரண்டினாலும்
ஓயாது ஆறாய்ப் பெருகுதையா
வழுவுதே வாழ்வு மனம் பதறுதையா
வந்து என் சிறையை மீளுமப்பா.

29 ஓதுகின்றேன் உந்தன் நாமம் பழனிவேல்
ஓம் முருகா உன் பாதம் பணிந்தேன்
காது கேட்கலையோ நானழும் ஓசை
கந்தா் வந்து சிறைகாருமப்பா.

30 நம்பின பேரைக் காக்கும் வேலவா
நான் உனக்கு போதாதோ
வம்பு செய்தால் என்னைக் கொன்றுவிடு அல்லேல்
வந்து சிறை மீட்டு வாழவிடு.

31 நானுமோ இவ்விடம் உன்னைத் துதித்து
நாளாந்தம் வாழ்த்தியே பாடுகின்றேன்
நீயும் வள்ளி தெய்வானையும் மயிலேறி
நித்தம் தவிக்கிறேன் காருமப்பா.

32 நிறுத்தி யிருக்கிறார் தூக்குமரம் அதில்
நெடுகிலும் கயிறு தானிருக்கும்
குறித்த காலம் வரை பார்க்கிறார்கள் கந்தா
குமரேசா என்சிறை மீளுமப்பா

33 நீடித்து இங்கே இருக்கையிலே தூக்கு
நிச்சயம் கட்டளை வந்த பேர்க்கும்
பாடித்துதித்து நான் கூறுகின்றேன் கேளும்
பாவியென் சிறையை மீளுமப்பா.

34 உண்ணு மட்டும் சாப்பாடு அவர்களுக்கு
உறங்கத் தலையணை பாய் கொடுத்து
நண்ணு மோர் பதினாலுநாள் வரை அவர்
நாதனே கடுங்காவல் விதிப்பார்.

35 நூற்றுக் கணக்கில் துரைமார் வந்து மனம்
நோகாமலே புத்தி சொல்வதுடன்
தேற்றி விரும்பிய பண்டம் கொடுக்கவே
தேவா தினம் ஓடர் விழுகுதப்பா.

36 நெடுநேரம் தினமும் பெரியதுரை வந்து
நீ பயப்படாதே என்று சொல்லி
பரிதாபத்துடன் மேல் எழுதுகிறார் சுவாமி
பாலனென் சிறையை மீளுமப்பா.

37 நேருக்கு நேராய் இருந்து ஒரு ஐயா
நித்தமும் சாப்பிடத் தான் புத்திகூறி
போருக்குச் செல்லுகிறார் தேற்றுதல் நாளாந்தம்
பேதையென் சிறையை மீளுமப்பா.

38 நைஸ்சான சாப்பாடு இறைச்சி முட்டை பானம்
நல்ல பால் கடலை பலகாரம்
விஸ்கி விறண்டி வியர் சாராயம் கள்ளு
விதம் விதம் வேலா கொடுக்கிறார்கள்.

39 நொந்து மனம் வெந்து வாடும்நேரம் இங்கே
நோட்டிஸ் பேப்பர்களும் தான் கொடுத்து
வந்து வாயிற் புகைப்பதற்கு சிகிரட்
வருகுது பதினாலு நாளுமையா

40 நோகுதே உன்னை நினைத்து என் மனம்
நோக்குவாய் என்னைத்தான் தேடிவந்து
வேகுதே நெஞ்சம் விதமான டாக்டர்கள்
வேளைக்கு வேளை வருவாரையா

41 நல்ல கதைப் புத்தகம் பென்சில் கொப்பி
நாம் விரும்பும் பெண் தவிரவெல்லாம்
பல் விளக்க எஸ். ஆர். பற்பசை தூரிகை
பாலார்க்குத் தானுண்டு கதிரேசா.

42 கடிதம் எழுதக் கடதாசி பென்சில்மை
கணக்கில்லாத சலுகைகள் மெத்தம்
படிதமாய்க் குளிக்கவே சவர்க்காரம் கொடுக்கிறார்கள்
பறந்துவந்து சிறை மீளுமப்பா.

43 இந்த விதமான ஈரைந்து மூன்று நாள்
இதமான உபசார இறுதி யூண்கள்
தந்து மாப்பிள்ளை போலே முடிவெட்டி
தலைசீவி வகையாகச் சேவெடுத்து.

44 ஆளைத்தான் ஒரு பக்கம் தராசில் வைத்து
அடுத்த பக்கம் மண்ணைத்தான் நிறுத்து
ஏலவேயாவும் எழுதி முடிக்கிறார்
என்செய்வேன் சிறை மீளுமப்பா.

45 நிறுத்து மண்சாக்கு கயிறு பலம் பார்க்க
நேரம் வரும் வரை நிம்மதியா?
அறுத்த கோழி துடிப்பதுபோல் துடிக்கிறேன்
அப்பனே என் சிறையை மீளுமப்பா.

46 மற்ற நாள் ஈரேழு காலையில் அலுகோசி
மகிழ்ந்து வருகிறான் முருகா என்முன்
கொற்றவேல்! வெள்ளைக் கோட்டு போட்டுப் பூ ட்டி
கொண்டு போறான் தூக்கு மேடை நாடி

47 ஏ. எஸ். பி. சுப்பிறீண்டன் டி. எம். ஒ. ஜெயிலர்
எல்லோரும் புடைசூழ்ந்து இரக்கப்பட்ட
வாவஸ் பெறாமல் முகமூடி கொண்டந்த
மரணமேடை யினில் நிறுத்துவார்கள்.

48 பூ மிக்குள்ளே சுரங்கதானு முண்டு
பூ ராமல் கால் வைக்க மூடியுண்டு
காமி அலுகோசி கப்பிக் கயிற்றைக்
கழுத்திலே போடுறான் கார்முருகா.

49 தூக்கி உயிர் போனபின்பு வோறோரிடம்
தூதர்கள் கொண்டு போகிறார்கள்
பாக்கி வெட்டி கிழித்து பழகுவார்கள்
படிக்கிற வைத்திய மாணவர்கள்.

50 மண்ணுலகத்தினில் எந்தனுக்கு இங்கே
மறியல் தரவும் வேண்டாம் முருகா
கண்ணாரக் கண்ட காட்சிகளை நான் சொன்னேன்
காத்து சிறை மீட்டு ஆளுமப்பா.

51 மாளுமிடத்தைவிட இது கஷ்டம்
மால் முருகா என்ன சொல்வேன் நான்
ஈழமதில் சிறைச்சாலை பதினைந்து
எங்கெங்கும் வேலை நிறையவுண்டு.

52 மின்தறி வேலைகள் ஒரு புறம் இங்கே
விதம் விழதமான தச்சன் கம்மாலைகள்
பொன் செய் கொல்லர் ஒருபுறம் உலோகப்
பொடியொட்டு வேலைகள் மெத்தவுண்டு

53 மீண்டும் நான் கூறுகின்றேன் தையல் பாட்டிகள்
விதம் விதமான உடை தைப்பதும்
ஆண்டுக் கணக்கில் அடிக்கிறார்கள் தும்பு
அளந்து கொடுக்கிறார் திரிப்பதற்கு.

54 முன்னாலே தோட்டச் செய்கையிலொரு பாட்டி
முக்கிச் சுமக்கிறார் கக்கூஸ் வாளி
வண்ணாரப் பாட்டியும் வாவர் பாட்டிதாஃனம்
வகுத்து இக்கிறார் வாரும் அப்பா.

55 முன்பு இளமை என்பது கிடையாது
முழுச் சிறை வீட்டிலும் வேலையுண்டு
காப்புப் போட்டு வேலை வாங்கும் ஒரு பாட்டி
கயவர்களில் நின்று கார்வேலா.

56 மெல்ல நடந்து வேலை செய்வதைக் கண்டால்
வேண்டுமட்டும் நல்ல அடிகொடுப்பார்
தள்ளித் திரும்பி நாம் அடித்தால் ஐயோ!
சாற்றுகிறேன் படும் கஸ்ஷ்ட நிலை.

57 மேய்ந்து திரியும் மூட்டை உறைவிடம்
மேல்ஒளி இல்லா இருட்டறையில்
காய்ந்தால் குடிக்க உப்புக் கஞ்சி உண்டு
கதிரேசா என் சிறை மீளுமப்பா.

58 மைந்தர்கள் அறியக் கூறுகிறேன் வேலா
மாளும் சிறை வெலிக்கடை கண்டி
கந்தா பதுளை மாத்தளை கோப்பாய் இன்னும்
கதிர்வடிவேலா அளுக்கடையும்.

59 கூசாமல் திரிவதற்குப் பள்ளே கலே
கூடிய சிறுபாலர்க்குவத்து பிட்டி
ரேசா மட்டக்களப்பு யாழ்ப்பாணம் கந்தா
நேரிழையாருடன் வாருமப்பா.

60 கெடுதி செய்வோர்களுக்கே இந்தச்சிறைவீடு
கேசவன் முருகா நரகமையா
விடுதி நீர் கொழும்பு அநுராதபுரம்
வேலா என் சிறை மீளுமப்பா.

61 கேட்குமே என் சொல்வேன் வாரும் முருகா
கேலி செய்யாது என் உயிர்காரும்
நாட்டிலே நரகம் சொர்க்கம் எல்லாம் இங்கே
நாதனே என் சிறை மீளுமப்பா.

62 கைலை மலை தென் கதிரையில் வாழும்
கந்தா கடவுளே காட்டி விட்டாய்
உயிரை மாய்க்க முன்னம் ஓடி மயிலேறி
உத்தமனே சிறை மீளும் அப்பா.

63 கொடும் வினைகள் பாவங்கள் எல்லாம் அகற்றி
குமரேசா புண்ணியம் செய்வதற்கு
விடும் வழி திறந்து அருளும் காட்டி தங்க
வேலா சிறை மீட்டு காருமப்பா.

64 கோடு சிறை தூக்கு இல்லாமல் எனக்கு
கோப பாவ வினை அணுகாமல்
நாடும் நன்மையுடன் நான் வாழ்வதற்கு
நாட்டிலே அருள் தாரும் வேல்முருகா

65 கௌவைப் பழவினை தீர்க்கும் முருகா
கடவுளே உன் தலம் பாடுதற்கு
செவ்வையாய் அருள் தந்து நல்லவராய் வாழ
தேவா என் சிறை மீளுமப்பா

66 முந்தி யுதித்த விநாயகர் வாழி
மூர்த்தியே பாதார விந்தம் வாழி
சிந்தையுறை சிறைக் கும்மி யியற்றருள்
சித்தி விநாயகர் வாழியதே.

67 காயம்பு மேனியனார் கண்ணீர் வாழி
கடவுள் நாராயனார் பாதம் வாழி
வாயாரக கும்மி உரைக்க உதவிய
மகா விஷ்ணு தன் பாதம் வாழியதே.

68 கலியுகக் கடவுள் தான் வாழி
கதிர்காமத்துறை முருகன் வாழி
சலியாகக் கும்மி தமிழினிசை பொழிந்த
சரவணார் பொற்பாதம் வாழியதே.

69 ஆதி சக்தி அம்மை பாதம் வாழி கலை
ஆளும் சரஸ்வதி தான் வாழி
ஓதியே கந்தர்க்கும் பாவுரைக்க அருள்
உத்தமியாள் பாதம் வாழியதே.

70 உலகம் படைத்த வேலவர் பாதம் வாழி
ஓதும் கும்மிபாடு மக்கள் வாழி
பலரறியப் பாடிய கேதாரம் வாழி
பழுதகற்றினோரும் வாழியதே.

முற்றிற்று

**பாடியோன் :**

**ந. மா. கேதாரபிள்ளை**
**மட் - முதலைக்குடா,**
**கொக்கட்டிச்சோலை.**

MSW

# எம்மால் வெளிவந்த பிரதிகள்

- நாராயணதோத்திரம்
- தென்கதிரைமுருகன் பேரில் சிறைமீட்டகும்மி
- நல்லைக் கந்தன் தோத்திரம்
- தான்தோன்றீஸ்வரர் தோத்திரம்
- அமிர்தகழி விநாயகர் தோத்திரம்
- தாந்தா மலை வரலாற்று அம்மானை
- மறியல் வீட்டு அம்மானை
- அகதிகள் தோத்திரம்
- நாக பூசணி கும்மி தோத்திரம்
- சிறைமீட்ட தாந்தோன்றீஈசுபரர் தோத்திரம்

இப்புத்தகம் கிடைக்குமிடம்
**ந. மா. கேதாரபிள்ளை**
தாளையடிதெரு, காளிகோயில் வீதி,
முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை.

அன்பர்களே!

நெடுநோயாளர்கள், நரம்புத்தளர்ச்சி, பைத்தியகோளாறு, வாய்பேசாத ஊமை, காதுகேளாதோர் இப்படிப்பட்டவர்கள் இவருடன் கலந்து ஆலோசனை பெறுமாறு மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வணக்கம்

50/=

ஆதவன் அச்சகம், அரசடி. மட்டக்களப்பு. 065 222 2076.